# இந்திய உயர் ஸ்தானிகராலயம்

## கொழும்பு

************

**ஊடக அறிக்கை**

இந்தியாவில் பயிற்சியை நிறைவு செய்த பிரதமர் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளை **(PMSD)** கௌரவித்த இந்திய உயர் ஸ்தானிகராலயம்

கொழும்பில் இன்று (13.3.2020) நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் 2020 பெப்ரவரி 17 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இந்தியாவில் தேசிய பாதுகாப்பு படையின்(NSG) மெய் பாதுகாவல் படையினால் பயிற்றுவிக்கப்பட்ட பிரதமர் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளை (PMSD) இந்திய உயர் ஸ்தானிகராலயம் கௌரவித்திருந்தது. இரு வாரங்கள் நடைபெற்ற இந்த பயிற்சியின்போது பிரதமர் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் 21 பேருக்கு தாக்குதல் வல்லமை மற்றும் மெய்ப் பாதுகாவல்/ சுற்றுப் பாதுகாப்பு உள்ளிட்டவற்றில் முழுமையானதும் விரிவானதுமான பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார். இங்கு உரை நிகழ்த்தியிருந்த இந்திய பதில் உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப், பிரதமர் நரேந்திர மோடியின் இலக்கான பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி (சாகர்) கோட்பாட்டுடன் இணைந்தவாறு இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தினை சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் குற்றச்செயல் விசாரணைகள், தடயவியல், நிதி மோசடிகள், இணைய குற்ற விசாரணைகள் , போக்குவரத்து முகாமைத்துவம் , கைத்தொழில் பாதுகாப்பு மற்றும் அடிப்படைவாத ஒழிப்பு உள்ளிட்ட பரந்த விடயங்கள் குறித்து இலங்கை பொலிஸ் மற்றும் சட்ட அதிகாரிகளுக்கு இந்தியா பல்வேறு ஆளுமை விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருவதனையும் இந்திய பதில் உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் குறிப்பிட்டிருந்தார்.

************

கொழும்பு

**13-03-2020**